# புதிய நெருக்கடி குறித்து இந்தியாவுடன் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் எழுந்துள்ள நிலைமை தொடர்பாகவும் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் இலங்கை - இந்திய தலைவர்கள் ஆராய்ந்து வருவதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 27 இதழ் 95

யாழ்ப்பாணம் புதன்கிழமை 10 – 5 – 1995

## கிளிநொச்சியில் நேற்று சுப்பசொனிக் தாக்குதல்

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் நேற்றுமாலை இரு சுப்பர்சொனிக் விமானங்கள் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கண்மூடித்தனமான குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தின.

நேற்று மாலை 5-45 மணியளவில் நடைபெற்ற இக்

(6-ம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பீட மாணவர்கள் உண்ணாவிரத போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஐந்து நாட்களாக மருத்துவ பீட மாணவர்களால் நடாத்தப்பட்ட வழி மறிப்புப் போராட்டமானது நிர்வாகத்திடமிருந்து தக்கத் தீர்வு எதனையும் பெற்றுக் கொள்ள ததனால் உண்ணாவிரதப்போராட்டமாக இன்று புதன்கிழமையிலிருந்து தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. க மருத்

(6ம் பக்கம் பார்க்க)

### புலிகள் அமைப்பில் உள்ளது போல்

# ராணுவத்திலும் தற்கொலை படை பிரிவொன்று அமைக்க கோரிக்கை

## ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் எதிர்த்துப் போராடுவதற்காக இராணுவத்தில் தற்கொலைப் படைப்பிரிவு ஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம்பார்க்க)

### முக்கிய அமைச்சுடன் மட்டும்

## சந்திரிகா ஆலோசனை!

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் முக்கிய மாநாடுகளில் கலந்துகொள்ள தற்போது மிகமுக்கிய அமைச்சர்கள் மட்டும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அழைக்கப்படுகின்றனர்

(6ம் பக்கம் பார்க்க)

### ரூபவாஹினி மீதான

## அரச கட்டுப்பாட்டை எதிர்த்து வசந்தராஜா நேற்று ராஜினாமா

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம். வசந்தராஜா நேற்று தமது பதவியிலிருந்து ராஜினாமா செய்தார்.

அரசு தரப்பிலும் மற்றும் இராணுவ, வெளியார் தரப்பிலும் அவருக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டதையடுத்தே அவர் தமது பதவியை ராஜினாமா செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

திரு. வசந்தராஜா ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியை ஏற்ற நாளிலிருந்து அவருக்கு பல

(5-ம் பக்கம் பார்க்க)

### தெல்லிப்பழையில்

## இராணுவத்தினரால் ஒருவர் சுட்டுக்கொலை!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் நேற்று இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டிற்கு ஒருவர் பலியானார்.

நேற்று மாலை 4 மணியளவில் தோட்டத்தில் புல்லுப் பிடிங்கிக்கொண்டிருந்த இராசு சிவலோகநாதன் (31 வயது)

(6-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி முகாம்கள் அன்றாடம் கண்காணிப்பு

(கொழும்பு)

வடபகுதி இராணுவ முகாம்களுக்கான விமானம் மூலமான உணவுப்பொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளதையடுத்து மேற்படி முகாம்கள் அன்றாடக்கண்காணிப்பிற்குள்ளாககப்பட்டு வருவதாக அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் அவ்ரோ விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதையடுத்தே பலாலி ராணுவ தளத்துக்கான விமான சேவைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் குடாநாட்டின் முகாமிலுள்ள 20 ஆயிரம் துருப்புக்களின் உணவுநெருக்கடி நிலையைக் குறைக்கும் விதத்தில் ஓரளவு விநியோகம் இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

க-இ

## "தமிழர் கேட்பதைக் கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது"

### – ஹரி குணதிலகா கருத்து

(கொழும்பு)

தமிழர்கள் கேட்பதை கொடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என சிறிலங்காவின் முன்னால் விமானப் படைத்தளபதி ஏயர்வைவ மார்ஷல் ஹரி குணதிலகா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு குறிப்பிட்டளவு தன்னாட்சியை வழங்கும்படி ஜனாதிபதி சந்திரிகாவை தான் கேட்டுக் கொள்ளப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலகவின் மகன் விங் கொமாண்டர் சரிந்தகுணதிலக்க கடந்த 29ம் திகதி அவ்ரோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட போது கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரி

## பல்கலைக்கழக மாணவர் யாழ். நகரில் ஊர்வலம்!

(திருநெல்வேலி)

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீடத்தில்இணைப்பதனைஎதித்து நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலமாக சென்று அரச அதிபர் செயலகத்தில் மகஜர் கையளித்தனர்.

நேற்றுக்காலை பல்கலைக்கழகத்திலிருந்து ஊர்வலமாக மாணவர் சென்று மேற்படி மகஜரை கையளித்துள்ளனார்.

கடந்த வாரம் முதல் தனியார் மருத்துவக்கல்லூரி மாணவரை பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைப்பதை எதிர்த்து மாணவர்கள் பல்கலைக்கழக வகுப்புக்களை பகிஸ்கரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(6-ம் பக்கம் பார்க்க)

### விமானசேவைகள் ரத்தானதை அடுத்து

## வட-கிழக்கில் அரச ஊழியர் கொடுப்பனவுகளில்பாதிப்பு ஏற்படும்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதியில் ஒய்வூதிய கொடுப்பனவு உட்பட பல கொடுப்பனவுகளை வழங்குவதில் அடுத்த சில வாரங்களில் பெரும் பாதிப்பு ஏற்படக்கூடும் என கொழும்பில் நிதித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

கொழும்புக்கும் மட்டக்களப்பிற்குமான விமான சேவைகள் கடந்த ஒருவார காலமாக நடைபெறுததால் ஏற்கனவே இப்பகுதியில் பெரும் நிதி நெருக்கடி தோன்றியுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் தாக்குதல்களையடுத்து வடக்கு-கிழக்குபகுதிகளில் விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளகாரணத்தினாலேயே இந்த மாவட்டங்களில் நிதிநிலை நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

க-இ-ரி

# பலாலி ஷெல் தாக்குதலில் ஒருவர் பலி; நால்வர் காயம்

(வடமராட்சி)

பலாலி இராணுவத்தினர் கடந்த 7ம் திகதி இரவு விடாது ஷெல் தாக்குதலை நடாத்தினர்,

வலிகாமம் வடக்கு வடமராட்சி போன்ற பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன.

மேற்படி தாக்குதலில் அச்சுவேலிப்பகுதியில் ஒருவர்மரணமடைந்தார வடமராட்சியில் ஒருவர் படுகாயமடைந்தார் குடியிருப்புக்கள் கால்நடைகள் பெரும் சேதமடைந்தன.

வலி வடக்கு கதிரிப்பாய் அச்சுவேலிப்பகுதியில் எஸ் சிவலிங்கம் (வயது-60) என்பவர் கால்கள் சிதறுண்டநிலையில் மரணமானுர்.

சதிரிப்பாய்ப் பகுதியில் ஈ இராஜேஸ்வரன் என்பவரின் வீடு முற்ருகச் சேதமடைந்தது பத்தமேனி வைரவர் ஆலயச் சூழலில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததில் பல மரங்கள் முறிந்து விழுந்தது டன் வைரவர் ஆலயமும் சிறு சேதத்திற்குள்ளானது

அச்சுவேலி வல்லை வீதியிலுள்ள அந்தோனியார் ஆலயமும் சேதமடைந்தது. அப்பகுதி மக்களும் இடம் பெயர்ந்தனர்.

தம்பசிட்டி வானக்குடியிருப்புப் பகுதியிலுள்ள இளையதம்பி இராஜரட்னம் என்பவரது வீட்டின் மேல் விழுந்து வெடித்ததில் பல லட்சம் பெறுமதியான உடமைகளும் சேதமடைந்ததுடன் அவரது மனைவியான திருமதி இராஜரட்னம் பகவதி (வயது 60) என்பவரும் காயமடைந்தார்.

வியாபாரி மூலை'பளவத்தை என்னுமிடத்திலுள்ள எஸ் பரஞ்சோதி என்பவரது வீட்டிலுள்ள மலசல கூடத்தின் மேல் ஷெல் விழுந்து வெடித்ததால் மலசலகூடம் முற்ருக சேதமடைந்தது.

வலவெட்டித்துறை சுங்கப் பகுதி வீதியிலுள்ள சத்திவேல் திலகரட்னம் என்பவரதுவீட்டு முற்றத்தில் ஷெல் விழுந்து வெடித்ததில் அவர்களது பெறுமதி மிக்க உடமைகளும் வீட்டின் ஒருபகுதியும் சேதமடைந்தன அங்கு இருந்தவர்கள் இருவரும் தெய்வாதீனமாக உயிர் தப்புனர்.

வல்வை புட்டணி ல்பிள்ளையார் வீதியில்விழுந்துவெடித்த ஷெல்லினு ல்ஆலயம் சூழலில் உள்ள சிறுவீடுகள் சிறு சேதமடைந்தன.

மற்றும் தொண்டைமானுறு வல்லை வெளி மண்டான். கரணவாய் கிராமக் கோட்டடி. வல்லிபுரக்கோயில் இறங்குதுறைமுகம் போன்ற பகுதிகளிலும் ஷெல்கள் வெடித்தன

அதிக அளவிலான ஷெல்கள் வல்வைக் கடல் பருத்தித் துறைக் கடல் தம்பசிட்டிக் கடல் போன்ற பகுதிகளில் விழுந்து வெடித்தமையால் அதிக சேதங்கள் ஏற்படவில்லை. இ-51

# ஆழ்ந்த நித்திரையிலிருந்த வயோதிப மாதுக்கு கத்திக்குத்து

## சங்கிலியும் பறிமுதல்

[யாழ்ப்பாணம்[

கள்வனின கத்திக்குத்துக்கு இலக்கான வயோதிபப்பெண் ஒருவர் படுகாயமடைந்தநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

திருநெல்வேலி தாளையடி ஒழுங்கையில் நேற்றுமுன் தினம் இச்சம்பவம் இடம்பெற்றுளளது. வீட்டின் முன் பகுதியில் கட்டிலில் நித்திரை செய்து கொண்டிருந்தபோது பொன்னம்மா சுப்பையா [வயது 78] என்பவரின நெற்றியில் கத்தியாற் குத்திய கள்வன் அவரது ஒருபவுண் தங்கச் சங்கிலியை பறித்துக் கொண்டு சென்றுவிட்டான்.

வீட்டின் பின்புறத்தில் பெருமகன் ஆழ்ந்த நித்திரையில இருந்ததால் அவருக்கு இச்சம்பவம தெரியவரவில்லை. மறுநாள் காலை பெருமளவு இரத்தம் வெளியேறிய நிலையில் மயக்கமுற்றிருந்த இந்த வயோதிப மாதுவை அயலவர்கள் உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். -சி

# மதுபோதையில் தன்னைத்தானே தீமூட்டினர்

(ஆனைப்பந்தி)

மதுபோதையில் தன்னைத் தானே தீமூட்டியவர் பலத்த காயங்களுக்குள்ளானுர்.

கடந்த 4ம் திகதி குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞரே காயமடைந்தவராவார்.

மது அருந்திவிட்டு போதையில் மண்ணெண்ணையைஊற்றி இவர் தீமூட டிக்கொண்டதாகவும், அயலவர்களால் இவர் காப்பாற்றப்பட்டு போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. -101-சி

கொழும்பு நகரில்

# தொழில்பேட்டைகளை நிறுவ அனுமதி வழங்கப்படமாட்டாது

(கொழும்பு)

கொழும்பு நகரில் இனிமேல் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு அரசு அனுமதி வழங்கப்படமாட்டாதென்று வீடமைப்பு நிர்மாணத்துறை பொதுவசதிகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவித்தள்ளார்.

அமைச்சர்இதுபற்றிமேலும் தெரிவிக்கையில்: கொழும்பு நகரில் நாளுக்குநாள் சனநெரிசல் அதிகரித்து வருவதினுல் போக்குவரத்து விதிகள் பெரிதும் பாதிப்படைவதுடன் பொலிஸாரும் பெரும் சிரமத்துக்குள்ளாகின்ருர்கள்.

வேலைகளின் நிமித்தமே பொதுமக்கள் கொழும்பை நோக்கி படையெடுப்பதினுல் இங்கு சனநெரிசல் அதிகரித்து வருகின்றது.

ஆகவேதான் இந்த சனநெரிசலை கட்டுப்படுத்தும் முகமாக வருங்காலத்தில் கொழும்பு நகரில் பாரிய தொழில் பேட்டைகளையோ அல்லது தொழிற்சாலைகளையோ நிறுவுவதற்கு அரசு அனுமதி வழங்காது அத்துடன் தற்போது நூற்றுக்கணக்கில் வேலை செய்யும் தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்பேட்டைகளை கொழும்புக்கு வெளியே கொண்டு செல்வது பற்றியும் ஆலோசிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். வி

# சாவகச்சேரியில் சைவசிந்தாந்த எழில் ஞானப்பெருவிழா

[யாழ்ப்பாணம்[

சாவகச்சேரி சைவ சித்தாந்த எழில் ஞானப் பெருவிழா இம்மாதம 13ம், 14ம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரையை பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணனும், தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர்திரு சு ப.தமிழ்ச்செல்வனும், மற்றும் பல அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

-க

# ஆசிரியர் சேவையில் புதிய நியமனக் கடிதங்கள்

(உடுவில்)

1994 ஒக்டோபர் ஆரும் திகதியில்இருந்து நடைமுறைக்குவரும் புதிய இலங்கை ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படும் ஆசிரியர்களுக்கானபுதிய நியமனக் கடிதங்களைவழங்கும் அதிகாரம் அந்தந்த மாவட்டத்துக்குப் பொறுப்பான அல்லது வலயங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய நியமனக் கடிதங்களை கையெழுத்திட்டு வழங்கும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட யாழ்ப்பாண வலயம் ஒன்று, வலயம் இரண்டு, மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னுர், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை ஆகியமாவட்டங்களைச்சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களுக்கு இவ்அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாகாணப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி அறிவித்துள்ளார்.

-109-சி

# மீன்பிடித் தடையினுல் பல குடும்பங்கள் பாதிப்பு

[தாளையடி]

வடச்கு-கிழக்குப் பகுதியில் மீன்பிடித்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளதால் இடபகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முன்னர் மீன்பிடித் தடை அமுல்படுத்தப்பட்டிருந்த போது சடற்ருெழிலாளருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. கடந்த சில மாதங்களாக மீன்பிடித்தடை அரசல் நீக்கப்பட்டதும் அவர்களுக்கான நிவாரணமும் நிறுததப்பட்டது.

மீண்டும் மீன்பிடித்தடை அமுல் செய்யப்பட்டுள்ளதால் கடற்ருெழில் செய்வதை கடற்ருெழிலாளர்கள் முற்ருகக் கைவிட்டுள்ளதால் கடற்ருெழிலாளர் குடும்பங்கள் மிகுந்த கஷ்டமடைந்துள்ளனர்: 163

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–05-10**

**புதன் இரவு**

8-02 குயிலோசை - நிகழ்ச்சியில் ''ஆனையைஅடக்கிய அரியாத்தை'' நாட்டுக் கூத்தின் 3-ம் பகுதி.
8-20 வாத்திய கானங்கள்
8-30 செய்திகள்
8-40 நாடகம் - இ செல்வரட்ணம் எழுதிய ''அக்கரைகள் பச்சையில்லை''

**1995–05–11**

**வியாழன் காலை**

7-02 மாவீர வணக்கம்
7-15 விடுதலை கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7 40 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–05–10**

**புதன் மாலை**

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 படப் பாடல்கள்
5-30 அறிவூற்று
6-00 சிந்தனைக்கு சில விளுடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-15 விளையாட்டுச் செய்திகள்
6 20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
6 30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# செபவழிபாடு

(அரியாலை)

யாழ், புனித- மரியாள் பேராலயத்தில் பிரதி புதன் கிழமைகளில் சதா சகாய மாதா செப வழிபாடும் யாழ். கோவில் வீதி அருள் ஆச்சிரமத்தில் பிரதிதிங்கள்கிழமைகளில் குழந்தை யேசு செப வழிபாடும் பாஷையூர் புனித-அந்தோனியார் ஆலயத்தில் பிரதி செவ்வாய்க் கிழமைகளில் புனித-அந்தோனியார் செப வழிபாடும் நடைபெற்றுவருகின்றது,

59

# மக்கள் இடம்பெயர்வு

(கோப்பாய்)

அச்சுவேலி பகுதியில்தொடரும் ஷெல் வீச்சால் இப்பகுதியில் உள்ள மக்கள் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

நள்ளிரவு வேளையிலும் தொடர்ந்து வீழ்ந்து வெடிக்கும் ஷெல்களினுல் பல பயன்தரு மரங்களும் கால்நடைகளும் வீட்டு உடமைகளும் சேதமாகின்றன. 160

# உப உணவு பயிர்கள்

(அரியாலை)

யாழ்- மாவட்ட கிராமப் பகுதிகளில் எள்ளு, குரக்கன், சாமை,வரகு,கௌப்பிகிழங்கு வகைகள் ஆகிய உப உணவுப் பயிர்களின் விதைப்புவேலைகள் ஆரம்பமாகியுள்ளன. 59

கிளிநொச்சி அரச அதிபர் குழுவினர்

# இடம்பெயர்ந்த 300 குடும்பங்களின் குறைகளை கேட்டறிந்தனர்

[தாளையடி]

வடமராட்சி கிழக்கு எல்லையிலுள்ள எல்லைக்கிராமங்களான சுண்டிக்குளம் பூனைத்தொடுவாய், தொடுவாய் வாய்க்சால் கிராமங்களுக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் தலைமையில் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அரசஅதிகாரிகள் குழுவொன்று அண்மையில் விஜயம் செய்து அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்.

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு இராணுவ நடவடிக்கை காரணமாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆளியவளை, கேவில், போக்கறப்பு கிராமங்களைச் சேர்ந்த சுமார் முன்னூறு குடும்பங்கள் வரை இடபெயர்ந்து இக்கிராமங்களில் வசித்து வருகின்றனர்

கடந்த மூன்று வருடங்களாக இப்பகுதி மக்கள் தங்கள் தேவைகள் குறைகளை அரச அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அண்மையில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் தலைமையில் இப்பகுதிக்குச் சென்றிருந்த பல்வேறு திணைக்கள உயரதிகாரிகள், அரசு சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கு இங்கு வாழும் மக்கள் தங்கள் தேவைகளை குறைகளை எடுத்துக்கூறியதுடன் மகஜரும் கையளித்தனர்,

இவர்களின் குறைகளைக் கேட்ட அதிகாரிகள் இவர்கள் இடம்பெயர்ந்து தங்கியிருப்பதால் அவசியம் தேவைப்படும் உதவிகள் சிலவற்றை தற்காலிகமாகச் செல்து தருவதாகக் கூறிச் சென்றுள்ளனர். 16ะ

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.



### மணிவாக்கு

எப்பொழுதும் கீழே விழாமல் இருப்பது புக ழுக்குரியதல்ல விழும் போதெல்லாம்விழுந்து விழுந்து எழுவதுதான் பெரும் புகழ் பெறும் வழி.

— கன்பூசியஸ்

## நமது நோக்கு

### அந்த அவலம்!

இரண்டாவது ஈழப் போர் ஆரம்பமானபோது மட்டக்களப்புப் பகுதியில் உள்ள சத்துருக்கொண் டான் கிராமத்தில் நடந்த அரச பயங்கரவாதத்தின் ஒரு அட்டூழிய விபரம் வெளிவந்துள்ளது.

காணுமற்போனேர் தொடர்பான விசாரணைக் குழு முன் இச்சம்பவத்தில தப்பிய ஒரேயொரு நப ரான வாலிபா சாட்சிய மளித்திருக்கிருர்.

சுற்றிவளைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை யின்போது, விசாரணைகரு என அழைத்துச்செலலப் பட்டிருக்கிருர்கள் 185 பேர்.

பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட இவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது?

காணுமற் போனுர்கள் என்றுதான் அவர்கள் கதையை இரண்டு சொற் களால் முடித்திருக்கிருர் கள்.

ஆனுல் —அவர்கள் அனை வரும் கொடூரமான முறை யில வெட்டிக் கொல்லப் பட்ட அவலம் நடைபெற் றிருக்கிறது,

சமாதானப் பிரியர் களான மக்களுக்காக இரா ணுவம் அமைத்துப் பாது காப்பு வழங்குகிருேம் என்றுதான் அடிக்கடி அரசு கூறிவருகிறது.

இதனை நம்பிய சில நாடு கள் போருக்கான அடிப் படைக் காரணங்களை உண ராது. போராளிகள் மீது பழிகளைப் போட்டு அச் சுறுத்தலுக்குத் துணைபோ வது வேதனைக்குரியதே.

'சத்துருக்கொண்டான்' நிகழ்ச்சிகள் மீண்டும் நடக் காதிருக்கவே போராளி கள் தமதுயிரையே துச்ச மென மதித்து மனேவலி யாலும் ஊக்கத்தாலும் செயற்பட்டு வான் படை களை வீழ்த்தும் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிருர் கள்.

அரச பயங்கரவாதத்தி லிருந்து தமது மக்களைக் காப்பாற்றவே இந்த நட வடிக்கைகள் என்பதை உணர்ந்துகொண்டால், சமாதானம் பற்றிப்பேசும் போது நிதானமாக நின்று இருபக்கத்திற்கும் சுட்டிக் காட்டவேண்டும்.

படையினரின் அச்சம் காரணமாகப் பல கொடு ரங்களைப் பற்றிவாய்திறக் காது மௌனமாகிவிட்ட னர் மக்கள். இத்தகைய கொடூரங்களைப் புரிந்த படையினரின் பாது காப்பை மக்கள் ஏற்பார் கள் என அரசு எதிர்பார்க் கக்கூடாது?

### ஆனையிறவு - வெற்றிலைக்கேணி

# இராணுவ தொடர்வேலிப் பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கிச்சூடு

(தாளையடி)

ஆனையிறவு, வெற்றிலை கேணி இராணுவ முகாமை அண்டிய பகுதிகளிலும் இப் பகுதியிலுள்ள இராணுவ தொடர் வேலிப்பகுதிகளிலும் கடந்த ஞாயிறு இரவு முழுவ தும் தொடர்ச்சியான துப் பாக்கி வேட்டுச்சத்தம் கேட்ட படி இருந்தது.

இதேவேளை வடமராட்சி கிழக்கு கடற் பிரதேசத்தில் கடற்படையின் ரோந்து பீரங்கிப்படகுகளின் நடமாட் டம் அதிகரித்துக் காணப்படு கிறது.

ஞாயிறு அதிகாலை கடற் படையினரின் பீரங்கி ரோந் துப் படகுகள் குடத்தனை மணற்காடு கிராமக் குடியிருப் புக்களை நோக்கி பீரங்கி வேட் டுக்களைத் தீர்த்தன இதனுல் இப் பகுதி மக்கள் பெரும் பீதியடைந்ததுடன் தற்காலிக மாக இடம்பெயர்ந்து வேறி டங்களுக்கு சென்றனர். 163-சி

### உலர் உணவு பொருட்கள்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலம் பாட சாலை மாணவர்களுக்கான மேலதிக முத்திரைக்கு தற் போது உலர் உணவுப்பொருட் கள் வழங்கப்பட்டு வருகின் றன. 71

# பொலிஸ் இன்ஸ்பெக்டர் குடும்பம் இரத்தினபுரியில் மண்சரிவில் சிக்கியது

(கொழும்பு)

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட மண்சரிவில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரின் குடும்பத்தி னர் சிக்குண்டு போயிருப்ப தாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மண்சரிவில் சிக்குண்டி ருப்போரை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் எனி னும் இதுவரையில் உபயோக மான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை மலைநாட்டின் பலபகுதியிலும் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள தால் பல இடங்களிலும் போக்குவரத்து தடைப்பட் டுள்ளது. பாரிய மரங்களும் அடியோடு சாய்ந்து வீதிக்கு குறுக்கே வீழ்ந்துள்ளன.

தொடர்ச்சியான அடை மழையால் ஆறுகளில் வெள் ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல பகுதிகளிலும் தொற்று நோய்களும் பரவி வருவதாக வும் தெரிவிக்கப்படுகிறது

க-சி

### இராசி பலன்

10-05-1995

புதன்கிழமை

(தமிழுக்கு சித்திரை-27)

தசமி முற்பகல் 11-09வரை பூசம் பிற்பகல் 1-24 வரை அமிர்தயோகம் இராகுகாலம் பகல் 11-54 முதல் 1-24 வரை சுபவேளை மாலை 4-24 முதல் 5-54 வரை

மேடம்: கடினவார்த்தை, பயந்த சுபாவம், அலைச்சல்.

இடபம்: தொழில் பாதிப்பு மனக்குறை சுபவிரயம்.

மிதுனம்: நண்பர் கலகலப்பு உல்லாசம், பணவரவு.

கடகம்: விதண்டாவாதம், மனசஞ்சலம், உடல் அசதி.

சிங்கம்: சுயமுயற்சி, வாக்கு வன்மை, இனிய உறவு.

கன்னி: ஏமாற்றப்படல், குழப்பமடைதல், துயரம்.

துலாம்: பெரியார் ஆசி, சுபகாரியம், பயணநன்மை.

விருச்சிகம்: முதன்மைநிலை, சிடும்ப கௌரவம். காரிய சித்தி.

தனுசு: தொழில் முடக்கம், நீண்டதுயர், கண்வலி.

மகரம்: அடிமைப்படல், குடும்பபிரிவு, கோபவார்த்தை

கும்பம்: விருந்தினர்வருகை தாயார் உதவி, சுபச்செய்தி.

மீனம்; பெருமை பேசுதல், கற்பனை, அதிக வருவாய்

- ஜோஸ்யர்

# கொழும்புநகரை சிறுசூறுவளி திடீரெனதாக்கியது; சேதமில்லை

[கொழும்பு]

கொழும்பு நகரின் சிலபகுதி களில் நேற்றுமுன்தினம் சிறு சூறுவளிக்காற்று வீசியுள்ளது. எனினும் இச்சூறுவளியினுல் பாரிய சேதம் எதுவும் ஏற் படவில்லையென வானிலை அவ தான நிலையம் தெரிவித்துள் ளது.

இச்சிறு சூறுவளியால் வீதி களில் மரங்கள் ஆங்காங்கே வீழ்ந்துள்ளதால்போக்குவரத் துக்கள் சிலமணிநேரம் பாதிக் கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

உயிர்ச்சேதமோ உடமைச் சேதமோ எதுவும் ஏற்பட வில்லை. இச்சூறுவளி சிலநிமி டங்கள் மாத்திரம் வீசியதால் பாரிய சேதம எதுவும் ஏற்பட வில்லை.

இதேவேளை கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த நான்கு நாட்களுக்கு மேலாக அடைமழை பெய்து வருகிறது. இதனுல கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் வெள்ளம் தேங்கி போக்கு வரத்தில் பெரும் பாதிப்பு ஏற் பட்டுள்ளது. அடைமழையா லும் காற்றினுலும் மின்சார வயர்கள் அறுந்து வீழ்ந்ததா லும் பல பகுதியில் மின்சா ரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சேரிடபகுதிகளில் குடிசை கள் இடிந்து வீழ்ந்துள்ளதால் பலர் படுகாயமடைந்துமுள்ள னர், க சி

### பலதும் பத்தும்

#### மடக்க முற்பட்டால்..

மேடையிலே சில பேச்சா ளர்கள் பேசிக்கொண்டிருக் கும்போது, சிலர் அவர்களை மடக்குவதற்காக, தமது திற மையை வெளிக்காட்டுவதற் காகச் சில கேள்விகளைப் போடுவார்கள்; சில சமயம் 'வாங்கிக்கட்டுவார்கள்!'

ஒருமுறை...உணவுற்பத்தி யின் அவசியம் பற்றி விரி வாக ஆராய்ந்து பேசிக் கொண்டிருந்தார் ஒருவர்.

அவரை மடக்கும் நோக் கோடு ஒருவர் எழுந்து ''மாட்டுக்கு உணவு வேண் டாமோ? அது பற்றிய தங் கள் கருத்தென்ன?,' என்று ஏளனமான முறையிற் கேட் டாராம்!

பேச்சாளர் கிறுங்கவில்லை: ''இங்கு கூடியிருப்போர் உணவுப் பிரச்சினையைப் பேசி முடிந்ததும் உங்கள் உணவுப் பிரச்சினையைப் பேசுகிறேன்'' என்ருர் கிண்டலாக!

சபையிற் சிரிப்பொலி; கேள்வி கேட்டவர் முகத்தில் அசடு வழிந்ததாம்!

— மயூரன்

### புல்மோட்டைத் தாக்குதலால்

## முஸ்லிம் காங்கிரஸ் - பொ. ச. மு. உறவில் விரிசல்நிலை தோன்றும் அபாயம்

[கொழும்பு]

திருமலை புல்மோட்டைப் பகுதியில் நான்கு முஸ்லிம் பொதுமக்கள் அரசபடையின ரால் அண்மையில் கண்மூடித் தனமாக சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவத்தையடுத்து பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிறகுமிடை யில் முறுகல்நிலை தோன்றி யுள்ளதாக கொழும்புச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அரசாங்கத் திற்கும் அதற்கு ஆதரவு கொடுத்துவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் ஏற்பட்ட இத்த கைய கசப்புணர்வானது அர சாங்கத்தை மேலும் பின்ன டையச் செய்யலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

புல்மோட்டைப் பகுதியில் இராணுவ கண்காணிப்பு நிலையம் மீது விடுதலைப் புலிகள் தாக்கியதையடுத்துஅரசபடை யினர் முஸ்லிம் மக்கள்மீது தாக்குதல் மேற்கொண்டதில் ஐவர் உயிரிழந்ததும் தெரிந் ததே.

இதேவேளை புல்மோட்டைப் பகுதி முஸ்லிம்கள் அச்சம் காரணமாக தமது இருப்பி டங்களைவிட்டு இடம்பெயர் ந்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. க சி

# தொழிற்சங்க நடவடிக்கை வேண்டாம்

## பல்கலை ஆசிரியர்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களை சேர்ந்த ஆசிரியர்கள் எவரையும் தொழிற்சங்க நடவடிக்கை எதிலும் ஈடுபடவேண்டாம் என கல்வி உயர்கல்வி அமைச் சர் றிச்சர்ட் பத்திரான கேட் டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: இத் தகைய தொழிற்சங்க நடவ டிக்கையானது பட்டதாரி மாணவர்களது போக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படு த்துவதுடன் அவர்களது கல்வி நிலையும் பெருமளவில் பாதிக் கப்படும்.

பல்கலைக்கழக நிர்வாக விட யங்கள் மற்றும் சம்பளக் கோரிக்கைகள் தொடர்பான எந்தப்பிரச்சினையானுலும்பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண் பதே சரியான நடவடிக்கை யாக இருக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழகங்களை யும் சார்ந்த கல்விசார் விரி வுரையாளர்கள் தமதுநிர்வாக ரீதியான பதவிகளை துறத்தது டன்விரிவுரைகளையும் மட்டுப் படுத்தி தொழிற்சங்கநடவடிக் கையில் இறங்கியுள்ளதும் தெரிந்ததே. க சி

# ஜனதிபதிக்கு அதிக அதிகாரங்கள்

## வழங்கும்முறையை காங்கிரஸ் நிராகரித்தது

(புதுடில்லி)

இந்தியாவில் அதிக அதி காரம் கொண்ட பிரதமர் முறையை மாற்றி ஜனதி பதிக்கு அதிகாரம் வழங்கும் கோரிக்கையை ஆளும் காங் கிரஸ் கட்சி நிராகரிப்பதாக அக்கட்சியின் பேச்சாளர் வி. என். ஹாட்கில் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:- பாரதீய ஜனதாக் கட்சி யினர் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். தற் போதைய பிரதமர் முறை யில் சில மாறுதல்கள் செய்ய

(5ம் பக்கம்; பார்க்க)

வீட்டிலே தோட்டம் செய்தால்
நாட்டிலே பசி தீரும்.

# அதிபர்கள், ஆசிரியர்கள் அந்தஸ்து தற்போது மேலோங்கியுள்ளது!

(வட்டுக்கோட்டை)

"அதிபர்கள். ஆசிரியர்களது அந்தஸ்து தற்போது மேலோங்கியுள்ளது இனிமேல் ஆசிரியர்கள் அதிகாரிகளுக்கு தலைகுனிய வேண்டிய அவசியமில்லை அதிபர்களும், சேவைகூடிய ஆசிரியர்களும் அதிகாரிகளின் அந்தஸ்துக்கு-சம்பளத்திற்கு சமப்படுத்தப்பட்டுள்ளனர்"

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் இலங்கைத் தமிழர் ஆசியர் சங்கமும் பிரட்ரிக் ஈபேர்ட்மன்ற எடியுக்கேசன் இன்ரநாஷனல் அமைப்பும் இணைந்து நடாத்திய கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைக் கிளைத் தலைவர் சைவப்புலவர் நா. க, தங்கரத்தினம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது

இக் கூட்டத்தில் சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பெருந்தொகையாகக் கலந்து கொண்டனர்.

திரு. மகாசிவம் தொடர்ந்து கூறியதாவது,

"இப்போதுதான் ஆசிரியர்களுக்கு கிராமங்களிலே நன்மதிப்பு ஏற்பட்டுள்ளது. காரணம் இன்று ஆசிரியர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள சம்பளம் தான்.

ஆசிரியர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டது போல் வேலைப்பளுவு அதிகரிக்கப்பட்டுள்ளது. சகல ஆசிரியர்களும் தமது கடமையை நன்கு உணர்ந்து சிறப்பாக செயலாற்றவேண்டும்.

ஆசிரியர்கள் தற்போது நான்கு வகையாக அமர்த்தப்பட்டுள்ளார்கள். வகுப்பு மூன்று தரம் ஒன்று, இரண்டு எனவும் வகுப்பு இரண்டு தரம் ஒன்று, இரண்டு எனவும் வகுக்கப்பட்டுள்ளனர். வகுப்பு மூன்று தரம் இரண்டில் உள்வாங்கப்பட்டவர் வகுப்பு மூன்று தரம் ஒன்றுக்கு உயர்வதற்கு போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலமே உயர்த்தப்படுவார். இப்படியாக ஒவ்வொரு வகைக்கும் உயரும்போது போட்டிப்பரீட்சையில் நிச்சயம் சித்தியடைய வேண்டும். அத்தோடு ஆசிரியர் செய்யும் கடமையின் சிறப்புக்களும் கவனிக்கப்படும் என்பதை மறந்து விடக்கூடாது.

கோட்டக் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர் மாற்றப்படுவதோடு அவர்களின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டுள்ளன. இதுவரை சம்பளம், இடமாற்றம், சேவை நீடிப்பு முதலான பல்வேறு கடமைகள் இவர்களது அதிகாரங்களுக்குள் இருந்தன. இவை அனைத்தும் குறைக்கப்பட்டு, வட்டாரக் கல்வி அதிகாரிக்குரிய வருடாந்தத் திரட்டுச் சேகரித்தல், கல்வி வளர்ச்சிக்கு உதவுதல் ஆகிய இரண்டுமே அதிகாரங்களாக வழங்கப்பட்டுள்ளன

சேவைகூடிய ஆசிரியர்களும், அதிபர்களும் தற்போது அதிக சம்பளம் பெறவுள்ளனர். இவர்களது அந்தஸ்தும் அதிகாரிகளது அந்தஸ்துக்கு சமப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர்கள் இனிமேல் அதிகாரிகளுக்குத் தலைவணங்கத் தேவையில்லை என்ருர்.

இக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பத்திரிகைச் செயலாளர் திரு எஸ். கே. சதாசிவம் உரையாற்றும்போது, ஆசிரியர்கள் அனைவரும் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சங்கானைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்வித் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைக் கிளை செயலாளர் திரு எஸ். ஜெயக்குமார் நன்றி கூறினர்.

-139

## காணுமல்போனேர் பற்றிய புகார்களைத் தொடர்ந்து பதிவு செய்ய ஏற்பாடு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் காணுமற்போனேர் பற்றிய முறைப்பாடுகளை பொதுமக்கள் ஜனதிபதி ஆணைக்குழுவுக்கு தெரிவிப்பதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் காணுமற்போனேர் பற்றி மட்டக்களப்பில் விசாரணை செய்வதற்காக ஜனதிபதியினுல் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழு தனது முதலாவதுகட்ட விசாரணையை கடந்த வாரம் முடித்துக்கொண்டது.

பெரும்பாலான பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை ஜனதிபதி ஆணைக்குழுவுக்கு தெரிவிக்காததினுல் இந்த ஆணைக்குழு விரைவில் மீண்டும் மட்டக்களப்பில் கூட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதுவரை தமது முறைப்பாடுகளை தெரிவிக்காத பொதுமக்கள் மட்டக்களப்பு செயலகத்தில் இயங்கி வரும் ஜனதிபதி ஆணைக்குழுவின் இணைப்பாளருக்கு தெரிவிக்கலாமென அரசு அறிவித்துள்ளது.

-வி

## துணை மருத்துவர் வேலை நிறுத்தம்: வேலைக்குத் திரும்புமாறு அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க துணை மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளதினுல் நோயாளர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் வேலைநிறுத்தத்தினுல் எக்ஸ்ரே பிரிவு, கதிர் இயக்கப் பிரிவு, ஆய்வுகூடப் பிரிவு என்பன பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் உள்ள மேற்படி பிரிவுகள் அனைத்தும் இயங்காததினுல் அங்குள்ள நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ள துணை மருத்துவர்களின் கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஆகவே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரையும் உடனடியாகவேலைக்குத் திரும்புமாறு பதில் சுகாதார அமைச்சர் திருமதி பவித்திர வன்னியாராய்ச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

-வி

## இறைச்சிக் கடைகளில் சுத்தம்பேண நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இறைச்சிக் கடைகளில் சுத்தம் பேணும்வகையில் இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்குரியசட்டப் பிரமாணங்கள் அடங்கிய சுற்று நிருபம் ஒன்றை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மை பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி முல்லை மாவட்டத்தில் விலங்கு வேளாண்மை பகுதியினரிடம் அல்லது விடுதலைப்புலிகள் வருவாய் துறையினரிடம் அங்கீகாரம் பெற்ற இறைச்சிக்கடைகளிலேயே இறைச்சிகள் விற்பனை செய்ய முடியும் என்று வேறு எந்தப் பகுதிகளிலோ கிராமங்களிலோ வைத்து விற்பனைசெய்வதற்காக கால்நடைகளை வெட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் உற்பத்தி செய்யக்கூடிய பாற் பசுக்கள் சினைப்பசுக்கள். மறிகள், எருமை இனங்கள், வடக்கன் நாம்பன் இளங்கன்றுகள் என்பவற்றையும் வெட்டக்கூடாதென்றும் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் முதல் நாள் 5 மணிக்கு முன்பதாக பரிசோதனைக்குட்படுத்தப்படல் வேண்டும் எவைப் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இறைச்சிக்கடைகளில் பாவிக்கப்படும் ஆயுதங்கள் துருப்பிடித்தவையாக இருக்கக்கூடாதெனவும் இறைச்சித் துண்டங்கள் துப்பரவான தகரத்தில் அல்லது தடித்தபொலித்தீன்மேல்வைத்தே விற்பனை செய்தல் வேண்டும் என்றும், இக்கடைகளில கடமையாற்றுபவர்கள் கட்டாயமாக மேலங்கி அணிந்திருத்தல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வலி. மேற்கில் மழையினுல் விவசாயிகள் பாதிப்பு

(வட்டுக்கோட்டை)

வலிமேறகு பிரதேசத்தில் பெருமழைகாரணமாக அராலி சங்கானை, பண்ணகம் முதலான கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அராலிப் பகுதியில் பம்பாய் வெங்காயம், வெங்காயம், புகையிலை, மிளகாய், எள்ளு முதலானவற்றைப் பயிரிட்ட விவசாயிகளே பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

இப்பகுதி விவசாயிகள் ஆண்டுதோறும் பம்பாய் வெங்காயத்தை பயிரிட்டு பயனடைந்து வந்த இவர்கள் பம்பாய் வெங்காயச் செய்கை பாதிப்படைந்ததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

-138

## யுத்த அணுகுமுறை: புலிகளுக்கு வெற்றி

[கொழும்பு]

கடந்த 19ம் திகதிக்குப் பின் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் சுமார் 200 படையினர் வரை பலியாகியுள்ளனர்.

யுத்த அணுகுமுறையைப் பொறுத்தவரையில் இது புலிகளுக்குக்கிடைத்த ஒருவெற்றி என்றேதான் கூறவேண்டும்.

இவ்வாறு பி. பி. ஸி யின் சிங்கள சேவையான சந்தேசிய தெரிவித்தது.

இதேவேளை புலிகள் அண்மைக்காலமாக நடத்திய தாக்குதல்களினுல் படையினரின் மன நிலையும் மன உறுதியும் பாதிக்கப்படவில்லையென்று படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை வெளியான வதந்திகள் படையினரைப் பலவீனப்படுத்தியே வெளியுலகுக்குக் காட்டியுள்ளன.

புலிகள் இரு விமானங்களை சுட்டு வீழ்த்தியபோதும் வடபகுதி முகாம்களுக்குத் தேவையான அனைத்தும் கப்பல் மூலமாக விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கில் ஒரு சிறிய முகாமைத் தாக்குவதென்ருலும் புலிகளுக்கு அதிகளவு ஆட்பலம் தேவை,

வடக்கில் படை முகாம்களிலுள்ள படையினர் யுத்தம் ஒன்றை எதிர்நோக்கி நவீன ரக ஆயுதங்களை சேகரிப்பதில் இப்போது ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இ

## அனலைதீவு ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் எவருமில்லை

(பண்டத்தரிப்பு)

அனலைதீவு அரசினர் கிராமிய வைத்தியசாலை டாக்டர்கள் எவருமின்றி வெறிச்சோடிய நிலையில் இருக்கின்றது. கடுமையான நோயாளர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும் சிகிச்சைக்காக திருகோணமலை அரசினர் வைத்தியசாலைக்கு அதிக பணம் செலவிட்டு கப்பல் மூலம் கொண்டு செல்லப்படும் அவல நிலை அங்கு நிலவி வருகின்றது

இவ்வாறு அண்மையில் அனலைதீவுக்கு சென்று விட்டு இங்கு கடமைக்கு திரும்பிய யாழ் சுகாதார திணைக்கள ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

அனலைதீவு பகுதியில் மாலை ஆறுமணிக்கு பின்னர் மக்கள் வெளியில் நடமாட தடைவிதிக்கப்பட்டுள்ளது. வாரத்தில் இரு தினங்கள் மட்டுமே காரைநகர் துறைமுகம் மட்டும் படகுசேவை நடாத்தப்பட்டு வருகின்றது. வெற்றிலைக்கு அங்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் தெரிவித்தார்,

72-சி

## அமெரிக்க அதிபர் ரஷ்யா சென்ருர்

[நியூயோர்க்]

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் நேற்று ரஷ்யா சென்றுள்ளார்.

2வது உலக யுத்தத்தை நினைவு கூரும் 50வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளும் பொருட்டே இவர் ரஷ்யா சென்றுள்ளார்.

லண்டன், பாரீஸ் போன்ற நகர்களில் இவ்விழா ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

-க-சி

## கண்டியிலும் பொலிஸார் தேடுதல் பெண்கள் உட்பட பல தமிழர் கைது

(கொழும்பு)

கண்டியில் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றைப் படையினர் அண்மையில் மேற்கொண்டதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது பெண்கள், சிறுவர்கள் உட்பட பெருமளவு தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

கொழும்பில் நடைபெற்ற தேடுதல் வேட்டை கண்டியிலும் பரவியதையடுத்து இங்கு வாழும் தமிழர் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை எவர் எங்கு வாழ்ந்தாலும் தாம் வதியுமிடங்களிற்கு அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தத்தமது பெயர் மற்றும் விபரங்களை உடனடியாக பதிவு செய்வதன் மூலம் தேவையற்ற சிரமங்களைத் தவிர்க்குமாறும் பொலிசார் பொதுமக்களை கேட்டுள்ளனர்.

க-சி

## ஷெல் தாக்குதலினுல் மக்கள் தினமும் இரவில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் குடிமனைகளை நோக்கித் தினமும் இரவு நேரங்களில் ஷெல் தாக்குதல் நடாத்துவதாக அங்கிருந்து வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் தினமும் பலாலி இராணுவ முகாமில் இருந்து கதிரபாய், பத்தமேனி. அச்சுவேலி ஆகிய பகுதிகளை நோக்கி ஏவப்படும் ஷெல் பெரும் சத்தத்துடன் இப்பகுதிகளில் வீழ்ந்துவெடிப்

(5ம் பக்கம் பார்க்க)

# எந்த அரசாங்கமும் எம்மை இனிமேல் ஏமாற்ற முடியாது

## செல்வன் உரை

(வட்டுக்கோட்டை)

''அரசு அன்றுடப் பிரச்சினையைத் தீர்த்தால் நாம் சமாதானத்திற்குத் தயார் சமாதானம் இல்லைபோரென்ருலும் நாம் போருக்குத் தயார். இதனை அரசு நன்ருக உணரவேண்டும். அரசுடன் பலமுறை பேச்சுவார்த்தை செய்யப்பட்டுள்ளது. கடைசியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கூறப்பட்டவை நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை சகலரும் அறிய வேண்டும் இனிமேல் எந்த அரசும் எம்மை ஏமாற்ற முடியாது. கப்பல் தாக்குதல், விமானத் தாக்குதல்களின் பலாபலனை இன்று அரசு உணர்ந்துள்ளது. இனிமேல் விமானத்தாக்குகல் நடைபெற்ருல் விமானங்களை சுட்டு வீழ்த்துவோம்''

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்காக நடாத்தப்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. செல்வன் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கருத்தரங்கு வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர் நாக தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது. திரு. செல்வன் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதை அடுத்து எமது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியைப்பற்றி திறமையைப்பற்றி வீரதீரச்செயல்களைப்பற்றி யாவரும் அறிந்திருப்பர். இந்த இயக்கம் மேலும் பல சாதனைகளை நிலைநாட்டி தமிழீழத்தைப் பெற வேண்டுமானல் எல்லோரும் எம்மோடு இணையவேண்டும்.

போர் ஆரம்பமானல் போராளிகள் மோதலில் இறங்குவர். ஆனல் வீட்டில் பாதுகாப்பாக இருக்கும் இளைஞர்கள்தான் இறங்கவேண்டி வரும். இதனை நன்குஉணர்ந்து கொண்டால் அதுவே சிறந்தது'' என்ருர்.

## ஷெல் தாக்குதல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பதால் மக்கள் இதனல் பீதி கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் பாதுகாப்புததேடி பள்ளிக்கூடங்களிலும், ஆலயங்களிலும் மக்கள்சென்றுதங்கிவருவதாகவும் மேலும் தெரிவிக்கபபடுகிறது.

-162

## ஜனதிபதிக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லாமே தவிர ஜனதிபதிக்கு அதிகாரம் வழங்கும் முறையைத் தமது கட்சி ஏற்காது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை வடமாநிலங்களில் தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகள் வெற்றிபெற்று வரும் நிலையில் மத்திய ஆட்சியில் ஜனதிபதி முறை அறிமுகம் செய்யப்படும் பட்சத்தில் உயர் சாதி இந்துக்கள் ஜனதிபதியாக தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பம் எளிதாகும் எனக் கருதும் பி. ஜே. பி தலைவர்களும், முன்னுள் ஜனதிபதி வெங்கட்ராமனும் இக்கோரிக்கையை முன்வைப்பதாக ராய்ட்டர் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளதும் இங்கு கூறத்தக்கது.

பிரித்தானியாவில் உள்ள வெஸ்ட்மினிஸ்ரர் அமைப்பை போன்று இந்தியாவிலும் மாற்றம் செய்வது குறித்து இந்திய அரசு பரிசீலனை செய்யும என வி. என். ஹாட்கில் தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

-க-சி

## வீதி சீர்கேடு

(வடமராட்சி)

யாழ்- வல்வையூடாக பருத்தித்துறை போக்குவரத்துவீதி ஒரே குன்றும் குழியுமாகவுள்ளது.

இவ்வீதி திருத்தப்படாமையால் வீதியின் பல இடங்களிலும் நீர் தேங்கி நின்று பிரயாணிகளுக்கும் வாகனப் போக்குவரத்திற்கும் பெரும் இடையூருக உள்ளது.

-51

## அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து இளைஞர் மன்றம் ,காரியசித்தி மாலை, ,பசுவின் மகிமை, ,பிள்ளை கதை' ,பாடசாலை மாணவர் களுககான அறிவு நூல்கள் பலவற்றை றை அச்சிட்டு இலவசமாக வெளியிட்டுள்ளது.

159

## இடமாற்றம்

(மானிப்பாய்)

நவாலி பிரதான வீதியில் நீண்ட காலமாக இயங்கிவந்த மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் 6வது இலக்க கிளை தற்போது நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வீதியிலுள்ள கட்டிடமொன்றுக்கு இடயாற்றம் செய்யப்பட்டுள்ளது.

71

## முருகபெருமானுக்கு புதியதேர்

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் முருகப்பெருமானுக்கு தேர் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தின் தின் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 3ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தேர் உற்சவத்தின்போது முருகப்பெருமான் இப்புதிய தேரில் பவனிவருவார்.

72

# கம்பன் விழாவின் இரண்டாம்நாள்நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 15வது ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9-30 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகும்.

காலை நிகழ்வில் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா தலைமையுரையும், திரு. டொமினிக் ஜீவா தொடக்க உரையும், திரு. செ. சிவமகாராசா வாழ்த்துரையையும் நிகழ்த்துவர்.

பண்டிதர் வீரகத்தி தலைமையில் ''சங்கமும் கம்பனும் இயற்கையை கையாண்ட விதம்'' பற்றிய ஆய்வரங்கு நடைபெறும்.

பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகும். தலைமையுரையை வைத்திய நிபுணர் வி. கருணுகரனும், தொடக்கவுரையை வண. பிதா பிரான்சிஸ் யோசப் அடிகளாரும், வாழ்த்துரையை யாழ். இந்து அதிபர் திரு. அ. பஞ்சலிங்கமும் நிகழ்த்துவர். 'கம்பமலர். நூல வெளியீட்டுரையை பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை முன்னுள் அதிபர் திரு. ஆர். எஸ். நடராஜா நிகழ்த்துவார்.

சிறப்புரையை யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் நிகழ்த்துவார்,

''குறள்நெறியில் அயோத்தியா காண்டத்தின் ஊடு பொருளாய்க் கம்பன் கொண்டது இல்லச் சிறப்பே, துறவற மேன்மையே, ஊழின் வலியே என்னும் பொருள் பற்றி இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமண்டபமும் இடம் பெறும்.

க-சி

# பலத்த காற்றினல் வாழை மரங்கள் முறிந்தன

[வடமராட்சி]

கடந்த இரு நாட்கள் வீசிய பலத்த காற்றினல் பெருமளவு வாழைகள் பிஞ்சுக் காய்களுடன் முறிந்து சேதமாகின.

கடந்த இரு நாட்களாக வீசிய கடும் காற்றினல் நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி திருநெல்வேலி போன்ற இடங்களிலுள்ள வாழைத் தோட்டங்களில் பெருமளவில்வாழைகள் முறிந்துவீழ்ந்து விவசாயிகளுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

வாழை உற்பத்தி அதிகளவிலுள்ள மேற்படி இடங்களிலுள்ள வாழைகள் சேதமடைந்துள்ளதால் வாழைப்பழத்தின் விலைகள் உயரலாமெனக் கூறப்படுகிறது.

51

# மதீனுவில்தீவிபத்து மூவர் கருகிப் பலி

[மெக்கா]

மதீனுவில் ஹஜ் யாத்திரிகர் தங்கியிருந்த முகாமில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தின் போது அம்முகாமில் தங்கியிருந்த குழந்தை உட்பட மூவர் உடல் கருகி மரணமாகினர். 100 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. வாயுக்கசிவினுலேயே இததீவிபத்து ஏற்பட்டதாகவும் அறியப்படுகிறது.

மதீனு நகர் மெக்காவிலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(க-சி)

## ரூபவாஹனி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தரப்பிலும் நெருக்கடிகளும் எதிர்ப்பும் ஏற்பட்டு வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இப்போது மோதல்கள் ஆரம்பமாகி யிருப்பதை சாட்டாக வைத்து ரூபவாஹினியை முழுக்க முழுகக போர் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என அவருக்கு நெருக்குதல் கொடுக்கப்பட்டது.

அத்துடன் தினமும் காலையில் ஒலிபரப்பாகும் நேரடி நிகழ்ச்சிகளை நிறுத்திவிடுமாறும் அவருக்கு நெருக்குதலும் உத்தரவும் பிறப்பிக்கபபட்டது.

இதற்கு தம்மால் இசைந்து கொடுக்கமுடியாது என காரணம் காட்டி திரு. வசந்தராஜா நேற்று தமது பதவியிலிருந்து ராஜினுமா செய்தார்.

திரு. வசந்தராஜாவின் தந்தை வடபகுதியைச் சேர்ந்தவரென்பதும் தாயார் ஒரு சிங்களப் பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

பி. பி. ஸி. சிங்கள சேவையான சந்தேசயவின் தயாரிப்பாளராகக் கடமையாற்றி வந்த அவர் இந்த அரசு பதவிக்கு வந்ததும் ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் அழைப்பின் பேரில் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைமைப்பதவியை ஏற்ருர் என்பதும் றெரிந்ததே.

திரு. வசந்தராஜாவின் ராஜினுமா தொடர்பாக கொழும்பு பி. பி. ஸி. முகவர் தெரிவித்துள்ளதாவது 'ஒளிபரப்பு சுதந்திரத்தில் அரசு புதிய கட்டுப்பாடுகளை விதிப்பதை எதிர்த்து அவர் பதவி விலகியிருக்கிருர்.

காலையில் நடைபெறும் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்கள் சில சமயம் பாதுகாப்புபடைகளை குறை கூறுகிருர்கள் என்பதாலும் நாடு மீண்டும் போரில் ஆழ்ந்து விட்டதால் இம் மாதிரியான கருத்துக்களை அனுமதிக்க முடியாது என்று திரு.வசந்தராஜாவிடம் கூறப்பட்டது.

ரூபாவாஹினி நெடுங்காலமாக செய்துவரும் சுயத்தணிக்கை வழக்கத்திற்கு எதிராக அவர் போராடி வந்தார்.

விடுதலைப் புலிகள் யுத்தம் ஆரம்பித்து 12 மணி நேரமான பின்பும் ரூபவாஹினியில் அந்தச் செய்தி ஒலிபரப்பப்படவில்லை

மேலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படக்கூடும் என்று அவர் மேலும் கூறினர். அவற்றைச் செயல்படுத்துவதற்கு பதிலாக ராஜினுமா செய்வதே மேல் என்று அவர் முடிவு எடுத்து பதவி விலகிவிட்டார்: செய்தி ஊடகங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவோம் என்ற உறுதியுடன் பொ. ஐ. மு. ஆட்சிக்கு வந்தது' ஆனல் அந்த உறுதி மொழி பலவீனமாக காட்சியளிக்கிறது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் பத்திரிகைகள் பெரும் அழுத்தத்துக்கு ஆளாகின. பலர் தங்கள் பததிரிகைகளில் வெளியிட்ட செய்திகளுக்காக புலனுய்வு பிரிவினரால் கடுமையாக விசாரிக்கப்பட்டார்கள். தற்பொழுது எலக்ரோனிக் ஊடகங்கள்மீது கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இ-ரி

## சேவைநலன் பாராட்டு விழா

(அரியாலை)

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனதில் 33 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்ற திரு, ஈ கிறிஸ்ரியின் சேவையைப் பாராட்டி பதில் பிராந்திய முகாமையாளர் திருமதி ராணி அரியநாயகம் தலைமையில் சேவைநலன் பாராட்டுவிழா நடைபெற்றது.

59


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

**புதிய மாணவர்களைப் பதிவுசெய்தல்- கல்வியாண்டு 1994/1995**

புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வந்து யாழ். பல்கலைக்கழகத்தில் பரீட்சைகளும் / அனுமதிகளும் கிளையில் தம்மை பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்.

விஞ்ஞான பீடம். விவசாய பீடம் - 1995 - 05 - 23

மருத்துவ பீடம்,
முகாமைத்துவக்கற்கை நெறி - - 1995 - 05 - 24

கலைப்பீடம் - 1995 - 05 - 25

வணிகத்துறை - 1995 - 05 - 26

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினுல் கிடைக்கப்பெற்ற அனுமதிக் கடிதம்
2. பிறப்புச் சான்றிதழ் } மூலப்பிரதி +
3. பாடசாலை விடுகைப்பத்திரம் } நிழற்பிரதி
4. தேசிய அடையாள அட்டை
5. 8 புகைப்படங்கள் - 2'' X $2\frac{1}{2}$''
6. கட்டணம்:

விஞ்ஞானபீடம் - 305/-
விவசாயபீடம் - 275/-
கலைப்பீடம் - 175/- (புவியியலை ஒரு பாடமாக எடுப்பவர்கள் ஆய்வுகூடக் கட்டணமாக 100/- செலுத்தவேண்டும்)

மருத்துவபீடம் - 350/-

பதிவாளர்

(எ-4922)

## ★ வடபகுதி படை முகாம்களுக்கு

# பொருட்கள் அனுப்ப அரசு எடுக்கும் முயற்சிகள் தொடர்ந்தும் பாதிப்பு!

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலுள்ள படை முகாம்களின் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் படையினருக்கு பொருட்களை அனுப்ப அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தடைப்பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக கப்பல்கள் வடபகுதிக்கு செல்ல அச்சம் தெரிவிப்பதால் இந்நடவடிக்கை தடைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பலாலி மற்றும் படைத்தளங்களுக்கான விமான மற்றும் ஹெலிகொப்டர்களின் போக்கு வரத்துகள் கடந்த 29ம் திகதி முதல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கடற்படைத் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது,

இதனால்முகாம்களில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதாக படையினர் நிலை மோசமடைந்து வருகிறது. ரி

## வானொலி உத்தரவுபத்திரம் பெற்று கொள்ளகோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வானொலிப் பெட்டிகளுக்கான உத்தரவுபத்திரங்கள் வழங்குதல் தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவை ஏற்கனவே பத்திரிகை வாயிலாகவும் வானொலி ஒலிபரப்பு மூலமும் அறிவித்திருந்தது.

இதன் பிரகாரம் நாளை 11ம் திகதி முதல் தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப்பகுதியிலேயோ அல்லது அவ்வப்பகுதி சார்ந்த உள்ளூராட்சி மன்றுகளிலோ அலுவலக நேரங்களில் இது தொடர்புடைய நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்வதற்குவகை செய்யப்பட்டுள்ளன,

10-06-95ற்கு முன்பாக வானொலிப்பெட்டிகளை வைத்திருப்போர் அனைவரையும் அவற்றிற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவை அறிவித்துள்ளதோடு வானொலிப் பெட்டிகளிற்குரிய திருத்தகங்களின் உரிமையாளர்கள் அனைவரும் எதிர்வரும் 25-ம் திகதிக்கு பின்பாக தாம் திருத்துவதற்காகப் பெறும் வானொலிப்பெட்டிகளுக்கான உத்தரவுப் பத்திரங்களுக்குரிய இலக்கங்களை பற்றுச்சீட்டுக்களில் பதிந்து பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

எக்காரணம் கொண்டும் தமிழீழ நிர்வாக சேவையின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக உத்தரவுப் பத்திரம் இன்றி வானொலிப் பெட்டிகளைக் கையாள்வது/ பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ரி

## அவ்ரோ அனர்த்தத்தில் வடக்கை சேர்ந்தவரும் பலி

(திருநெல்வேலி)

நிலாவரைப் பகுதியில் விடுதலைப் புலிகளினால் இரண்டாவதாக சுட்டு வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானத்தில் பலியானவர்களில் ஒருவர் வடபகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பொறியியலாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது,

மேற்படி விமானத்தில் வந்த 52 பேரும் விமானம் சிதறியதில் சிதறுண்டு பலியானார்கள் இவர்களில் ஒருவர் சுதுமலை பகுதியை பிறப்பிடமாக கொண்ட தமிழ்ப் பொறியியலாளர் ஆவார்; இவர் கொழும்பில் நீண்டகாலமாக குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தவர்.

இவரது உடலும் விடுதலைப் புலிகளினால் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டு காங்கேசன்துறையில் தகனம் செய்யப்பட்டுள்ளது. இவரது அஸ்தி உறவினரிடம் கொழும்பில் கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 157 இ

## மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மெய்வலுநர் போட்டி ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இன்று 10-ம் திகதி காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுமெனக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். ரி

## நாளை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

ஹஜ் பெருநாள் நாளை 11-ம் திகதி வியாழக்கிழமை வருவதால் அன்றைய தினம் தமிழீழ விடுமுறையாகக் கணிக்கப்படுகின்றது. என்று தமிழீழ நிர்வாக துணைப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார். ரி

## படையினர் அஸ்திகளை பெற உறவினர் மறுப்பு

(கொழும்பு)

அவ்ரோ விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதில் கொல்லப்பட்ட படையினர் பலரின் அஸ்திக் கலசங்களைப் பெற அவர்களது உறவினர்கள் மறுத்துள்ளனர்.

மேற்படி சடலங்களின் சிதறல்கள் காங்கேசன்துறையில் வைத்து தகனம் செய்யப்பட்டு அஸ்திகள் மட்டும் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. மேற்படி அஸ்திகள் தமது உறவினர் உடையது என்பதற்கு ஆதாரம் என்ன என்று கேட்டு அஸ்திகளைப்பெற அவர்கள் மறுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. ரி

## முக்கிய அமைச்ச

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் கொள்வனவு பாதுகாப்புநிதி ஒதுக்கீடு, அந்நிய நாடுகளில் உதவிகோரல் ஆகியன தொடர்பான தீர்மானங்களை அமைச்சர்கள்பலர் எதிர்ப்பதால் இந்த நடைமுறையை ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார்

தற்போது நடைபெறும் யுத்தத்துக்கென கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்தல் வெளிநாடுகளிடம் உதவி கோரல் ஆகியவற்றில் ஜனாதிபதிதற்போது ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ரி

## தெல்லிப்பழையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரே ஆசுபத்திரியில் பலியானவராவார்

இவர் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து மல்லாகத்தில் வசித்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## பல்கலை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மருத்துவபீடமாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய பீட மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

எதிர்ப்பு வாசகங்களும் சுவரொட்டிகளும் பல்கலைக்கழக சுவர்களில ஒட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 157-ரி

## மருத்துவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன்முதற்கட்டமாகஇன்று காலை 9 00 மணி முதல் யாழ் மருத்துவபீட மாணவர்கள் ஐந்து பேர் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் நீர் மாத்திரம் அருந்தி உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக ஏனைய மாணவர்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருப்பார்கள். என்றும் மேற்படி மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. ரி

## கிளிநொச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதவிபரங்கள்பற்றி முழுமையாக தெரியவரவில்லை.

சுப்பர்சொனிக் விமானங்கள் வீசிய குண்டுகள் பரந்தனில் மக்கள் குடியிருப்புகள் மீது வீழ்ந்து வெடித்தன. இதனால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

பேரிரைச்சலுடன் வந்த விமானங்கள் கிளிநொச்சியைச் சுற்றிவட்டமிடத் தொடங்கியதும் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர். (ரி)

# கொழும்பில் இராணுவம் பொலிஸ் கூட்டாக தேடுதல் வேட்டை!

## புலிகள் ஊடுருவலை தடுக்க முயற்சியாம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இராணுவத்தினரும், பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்கள்.

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களைத் தடுக்கும்முகமாகவே இந்த கூட்டுத் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் வீதிகளிலும் முச்சந்திகளிலும் கட்டிடங்களுக்கு முன்னாலும் காவலுக்கு நிற்க பொலிஸார் வீடுகளுக்குள் புகுந்து அங்கு தேடுதல் நடத்திவருகிறார்கள்.

இத்தேடுதலின்போது குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை கொழும்பு நகரிலுள்ள முக்கிய கட்டிடங்களின் பாதுகாப்பும் தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டிடங்கள்மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம் எனக் கருதியே பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரில் வீடுவீடாகச் சோதனை நடத்தும் பொலிஸார் குடும்ப அங்கத்தவர்களைத் தவிர ஏனையவர்களை வீடுகளில் தங்கவைக்கவேண்டாமென்று ஆலோசனை கூறி வருகின்றனராம். (ரி)

## புலிகள் அமைப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திலிருந்து ஒய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் இந்த செய்தி வெளிவந்துள்ளதாகவும் வெரித்தாஸ் குறிப்பிட்டது.

இராணுவத்திலிருந்து ஒய்வு பெற்ற மேஜர் கே.ஜி.கருணரட்ன இந்தக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இந்த தற்கொலைப் படைப் பிரிவில் சுயவிருப்பத்துடன் முதலாவது நபராக இணைந்து கொள்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் மேஜர் கருணரட்ன தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தின் தற்கொலைப் படைப்பிரிவில் சேர்ந்து கொள்ள விரும்பும் அனைவரும் சுயவிருப்பின் பேரிலேயே அதில் இணைந்து கொள்ளவேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

2-வது உலகப் போரில் ஜப்பானிய இராணுவம் 'றமிகாஸா' என்ற தற்கொலைப் படையை நிறுவி பல வெற்றிகரமான தாக்குதல்களை நடாத்தியது போல் இலங்கை இராணுவமும் ஒரு தற்கொலைப் படை அணியை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தற்கொலைப் படைப் பிரிவில் தானும் சுயவிருப்பத்துடன் இணைந்து கொள்ள தயாராக இருப்பதாக தென் பகுதியில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரும் முன்வந்துள்ளதாக லங்கதீப பத்திரிகையும் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

## புதிய நெருக்கடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தில் இந்திய உதவி நிச்சயமாக இலங்கைக்கு கிடைக்கும் என்றும் ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாகடல் பாதுகாப்பு மற்றும் உதவிகளை வழங்கினாலும் மீண்டும் தனது துருப்புக்களை இலங்கைக்கு அனுப்பிவைக்காது இருந்தாலும் இலங்கைக்கு தேவையான ஆயுத உதவிகளை வழங்கும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் தற்போது எழுந்துள்ள புதிய நெருக்கடிக்கு தீர்வு காண்பது தொடர்பாக இந்தியாவின் உதவியை அரசு நாடியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ரி

## வடபகுதி முகாம்களில் உணவுத்தட்டுப்பாடு இல்லை

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள படைமுகாம்களில் உணவுத் தட்டுபாடு எதுவுமில்லை. ஆறுமாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் அங்கே கையிருப்பில்உள்ளன. மேலும் தேவையானஉணவுப்பொருள்களையும் ஏனைய இராணுவ உபகரணங்களையும் கப்பல் மூலம் விநியோகிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு நேற்று அரசாங்கம் அறிவித்தது.

இதேவேளை பலாலி இராணுவ முகாம் புலிகளின் சுற்றிவளைப்புக்கு இலக்காகியிருக்கிறது என்று வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லையெனவும் அரசு நேற்று அறிவித்தது.

'திவயின' சிங்களப் பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்றுக்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை விடுத்தபோதே அரசு மேற்கண்டவாறு தெரிவித்தது.

எந்தச் சவாலையும் எதிர்த்துச் சமாளிக்கக்கூடிய நிலையில் வடபகுதி படையினர் உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. இ ரி

விடுதலைப்புலிகளின் படைத்தளங்களையும், முகாம்களையும் தாக்கி அழிப்பதே இந்த தற்கொலைப்படைப் பிரிவின் முக்கிய இலக்காக இருக்கும் என வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. இ-வி-ரி

## மாணவர் எழுச்சிநாள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் 1995 தொடர்பாக மாணவ முதல்வர்களுக்கான கலந்துரையாடல் இன்று கோப்பாய், சங்கானை. மருதங்கேணி கல்விக் கோட்டங்களிற்கு முறையே கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மு. ப. 9மணிக்கும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் மு. ப, 11 மணிக்கும், நாளை உடுவில் சண்டிலிப்பாய், கோட்டங்களிற்கு முறையே மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மு. ப. 9 மணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மு ப. 11 மணிக்கும் நடைபெறும்.

பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வேலணை ஊர்காவற்றுறை கல்விக் கோட்டங்களிற்கு சென். ஜோன்ஸ் அக்கடமியில் பி. ப. 5 மணிக்கு நடைபெறும். கே

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence aumber B 1633613.